
# கலைஞர் பல்கலைக்கழகம் குடந்தை வைத்த நாடு தரு நிதி!



தமிழின் அடையாள நதியான
காவிரிக் கரை நகரில்
'தென்னிந்தியாவின் கேம்ப்ரிட்ஜ்' ஆன
குடந்தையில்
கலைஞர் பல்கலைக்கழகம்!

சட்டமன்றத்தில்
அறிவித்திருக்கிறார் முதலமைச்சர்!

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்
கொண்டாட்டமாக
முதல் வேந்தராகத்
தமிழ்நாடு முதலமைச்சர்!

காலப் பேழையைக்
கவிதையால் திறந்தவர்!
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற
திருக்குறள் வரியைப்
பிறந்த பின்னர் என்ற சொற்களால்
யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற
கணியன் பூங்குன்றன்
காலத்தோடு நெய்தவர்!

'வாழ்நாள் முழுவதும்
தமிழ் மொழி, தமிழர் வாழ்வின்
உயர்வுக்காகப் பாடுபட்டவர்.
தமிழர் எவ்வாறு வாழவேண்டும்
தமிழ் மொழியை
எவ்வாறு போற்ற வேண்டும்.
தமிழில் எவ்வாறு
இலக்கியங்களைப் படைக்க வேண்டும்.
என்பதற்கெல்லாம்
அவர் ஒரு பெரும் சிகரம்"
என்று ஜார்ஜ் ஹார்ட் குறிப்பிட்ட
எங்களுக்கெல்லாம்
வழிகாட்டி, முன்னோடி என்று
ஞானபீட விருதாளர் ஜெயகாந்தனால்
பாராட்டப் பெற்ற
கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம்!

உரை ஓவியம்,
கட்டுரை, கவிதை
சிறுகதை, புதினம்,
நாடகம், திரை இலக்கியம்,
கடித இலக்கியம்,
தொலைக்காட்சித் தொடர்,
சொற்பொழிவு என்ற
பன்முக ஆளுமை கொண்ட
உலக அரசியல் தலைவர்களில்
ஒப்பிட்டுக் காண்பதற்கு அரிய

முத்தமிழ் அறிஞர் பெயரில்
கலைஞர் பல்கலைக்கழகம்!

குடந்தை, குடமூக்கு
ஒரு காலத்தில் சோழர்களின் தலைநகர்!
பிறகு கும்பகோணம் ஆகியிருக்கிறது!

உலக அளவில் வெற்றிலை பாக்கும்
உள்நாட்டில்
பட்டு நெசவும் டிகிரி காபியுமாக
வலம் வருகிற கும்பகோணத்தில்
கலைஞர் பல்கலைக்கழகம்!

கணித மேதை
இராமானுஜத்தையும்
சீனிவாச சாஸ்திரியையும்
மட்டுமின்றி
மகா வித்வான் மீனாட்சி சுந்தரம்
பிள்ளையையும்
அவரது மாணவர்
தமிழ்த் தாத்தா உ.வே.சா.வையும்
நினைவுபடுத்தும் மாநகரில்
கலைஞர் பல்கலைக்கழகம்!

அப்பர், சம்பந்தர் மட்டுமின்றி
ஆண்டாள், பெரியாழ்வார்,
திருமங்கையார், பூதத்தாழ்வார்களாலும்
பாடப்பெற்ற திருத்தலத்தில்
மதத்தில் புரட்சி செய்த
மகான் இராமானுஜர் பற்றித்
தொலைக்காட்சித் தொடர் தந்த
கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம்!
கு.ப.ரா., கரிச்சான் குஞ்சு, தி.ஜானகிராமன்
எம்.வி. வெங்கட்ராம் போன்று
தமிழை நவீனப்படுத்தியவர்களின்
கதைக் களத்தில்
கலைஞர் பல்கலைக்கழகம்!

மகாமகக் கொடுமைகளைக் கடந்து
சைவ, வைணவ, சமணக்
கோயில்களோடு
பௌத்த கோவிலுமாகச்
சமய நல்லிணக்கம் தரும்
கோயில்களின் மாநகரில்
அறிவாலயமாகக்
கலைஞர் பல்கலைக்கழகம்!

நான்கு வேதங்களையும் கற்பிக்க
1542 இல் வேத பாட சாலை
தொடங்கப்பட்ட நகரில்

"அய்யன் வள்ளுவரின்
அடிதொடரச் சூள் உரைப்பீர்
உய்ய வழி வேறில்லை
திருக்குறளைத் தோள் சுமப்பீர்" என்ற
கலைஞரின் பெயரில் பல்கலைக்கழகம்!

சென்னை மாகாணத்தின்
பழமையான கல்லூரியாக
1867 இல் தொடங்கப்பட்ட
கலைக்கல்லூரி நகரில்
கல்லூரிக் கல்விக் கொள்கையை -
பாடத்திட்டத்தை உருவாக்கிய நகரில்
புதிய கல்விக் கொள்கையை மறுத்துத்
தமிழ்நாட்டுக்கான
கல்விக் கொள்கையை உருவாக்கும்
தமிழ்நாடு முதல்வரால்
கலைஞர் பல்கலைக்கழகம்!

உலகம் அழியும்
பிரளயக் காலத்தில்
படைப்பாற்றலை
இமய மலை உச்சியில்
பிரமன் வைத்த குடம்
தரையில் இறங்கியதாகப்
புராணம் சொல்லும் நகரில்
செம்மொழி மாநாட்டின் வழி
தமிழின் படைப்பாற்றலை
உலகில் தலைநிமிர வைத்த
கலைஞரைக் கொண்டாடப்
பல்கலைக்கழகம்!

வெற்றி பெற்ற சோழர்
கிடைத்த நிதியைப்
பாதுகாப்பாக வைத்த இடம்
குடந்தை என்று
அகநானூற்றில் (60)
"கொற்றச் சோழர் குடந்தை வைத்த
நாடு தரு நிதி" என்று
குடவாயில் கீரத்தனார் பாடுகிறார்.
ஆம்! இப்போதும்
தமிழ்நாடு முதல்வர்
வேந்தராக
உச்சமன்றத்தின் வழியாகப்
பெற்ற வெற்றியை
நாடுதரு நிதியாகக்
கொண்டாடிப் பாதுகாக்கும் விதமாகக்
குடந்தையில்
கலைஞர் பல்கலைக்கழகம்!

அன்புடன்
ம.ரா.





மே தினத்தை முன்னிட்டு முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ அவர்கள் விழுப்புரம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் பணியாளர்களுக்கு இனிப்புகளை வழங்கி உழைப்பாளர் தின வாழ்த்துக்களை தெரிவித்தார். விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், தொமுச பொதுச் செயலாளர் வி.சேகர், மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், தலைமை கழக வழக்கறிஞர் சுவை.சுரேஷ், நகரச் செயலாளர் இரா. சக்கரை,நிர்வாக பணியாளர் முன்னேற்றச்சங்க பொதுசெயலாளர் வாலிபால். மணி, தலைவர் ஞானசேகரன், ஒன்றிய செயலாளர் கல்பட்டு வி.இராஜா, பேரூராட்சி செயலாளர் பா.ஜீவா, நகர பொருளாளர் இளங்கோ, நகர மன்ற துணை தலைவர் சித்திக் அலி, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் கபாலி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஸ்ரீ வினோத், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ர.சதிஷ் உள்ளிட்ட மத்திய சங்க கிளைக் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## ''காலனி'' எனும் சொல் நீக்கம்!

# பட்டியலின மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றிய முதல்வருக்கு நன்றி!

### தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எஸ்.சி.பிரிவு மாநில தலைவர் எம்.பி.ரஞ்சன்குமார் அறிக்கை!

சென்னை, மே. 3 -

''காலனி'' எனும் சொல்லை நீக்கிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு காங்கிரஸ் எஸ்.சி. பிரிவுத் தலைவர் எம்.பி.ரஞ்சன்குமார் நன்றி தெரிவித்துள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் எஸ்.சி. பிரிவு மாநில தலைவர் எம்.பி.ரஞ்சன் குமார் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

2021 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு சொன்னபடியே தமிழ்நாட்டு மக்களுக்கு விடியலைத் தந்திருக்கிறது.

4 ஆண்டுகளை கடந்து 5 வது ஆண்டில் அடி எடுத்து வைக்கும் நிலையில், திமுக அரசின் திட்டங்கள் மக்களைச் சென்றடைந்துள்ளன என்பதை எவராலும் மறுக்க முடியாது. அதற்கு ஏராளமான உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

பெண்களுக்கான கட்டணமில்லா பேருந்து பயணமான விடியல் திட்டம், மகளிர் உரிமைத் தொகை, புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் திட்டம் என பெண்கள் மட்டுமின்றி ஆண்களையும் சென்றடைந்திருக்கிறது. கடந்த 4 ஆண்டுகளில் பெண்கள் சுயச்சார்பு கொண்டவர்களாக உயர்ந்திருப்பதாக மத்திய அரசின் தரவுகளே தெரிவிக்கின்றன. பட்ஜெட்டை 'ரூ' போட்டு அலறச் செய்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், தன்மானமிக்கவர்கள் தமிழர்கள் என்பதை பறைசாற்றிவிட்டார்.

நிதிப்பகிர்வில் மோடி அரசு பாரபட்சம் காட்டிய போதும், 2024-25 ஆம் நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி 9.69 சதவீதம் உயர்ந்து, இந்தியாவிலேயே பொருளாதாரத்தில் முதலிடத்தைப் பிடித்திருக்கிறது தமிழ்நாடு. இது 14 ஆண்டுகளில் இல்லாத சாதனையாகும்.

கல்வி வளர்ச்சி, முதலீடு ஈர்ப்பு, உற்பத்தி அதிகரிப்பு போன்றவையே பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய காரணம். மனித உரிமைகளைக் காப்பதிலும் திமுக அரசுக்கு நிகர் திமுக அரசு தான். கடன் வசூலிக்கும் போது மனித உரிமைகள் பெருமளவில் பாதிக்கப்படுவது வாடிக்கையாக இருந்தது. இந்தப் பிரச்சினைக்கு மணி கட்டியிருக்கிறார் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்.

தனிநபர்கள், சுய உதவிக்குழுக்கள் உள்ளிட்டவற்றிற்குக் கடன் வழங்கும் நிறுவனங்கள் வலுக்கட்டாயமாக வசூலிப்பதைத் தடுக்க வகை செய்யும் புதிய சட்டத்திருத்த மசோதாவைத் தாக்கல் செய்திருக்கிறார். இது அடித்தட்டு மக்களை குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பு அரணாக மாறும் என்பதில் சந்தேகம் இல்லை.

நம் மண்ணின் ஆதிக்குடிகளை இழிவு செய்யும் அடையாளமாக உள்ள 'காலனி' எனும் சொல் அரசு ஆவணங்களில் இருந்தும் பொதுப் புழக்கத்திலிருந்தும் நீக்கப்படும் என்ற முதலமைச்சரின் அறிவிப்பு வரவேற்கக்கூடியது. பட்டியலின மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிய முதலமைச்சருக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் எஸ்.சி., பிரிவு சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்குப் பல துறைகளில் தமிழ்நாடு முதலிடத்தைப் பிடித்திருக்கிறது.



உயர் கல்வி சேர்க்கையில் 50 சதவீதத்தைக் கடந்து நாட்டிலேயே முதலிடத்தைப் பிடித்திருக்கிறது தமிழ்நாடு.

தமிழ்நாட்டில் வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளவர்கள் 1.43 சதவீதம் மட்டுமே. அந்த வகையில் வறுமை ஒழிப்பில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. 2024-25ம் நிதி யாண்டில் தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் ரூ.3,58,000 லட்சமாக உள்ளது. தேசிய சராசரி வெறும் ரூ.2,06,000 லட்சம் தான்.

மக்களின் வாழ்வாதாரத்தை கடந்த 4 ஆண்டுகளில் திராவிட மாடல் அரசு உயர்த்தியிருக்கிறது என்பதற்கு இதைவிடச் சான்று தேவையா?

அதுமட்டுமின்றி, அதிக அரசு மருத்துவர்கள் மற்றும் மருத்துவக் கல்வி இடங்கள் கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடே முதலிடம், மின்சார இரு சக்கர வாகன தயாரிப்பில் முதலிடம் வெற்றி முகம் தொடர்கிறது.

இரவு, பகல் பாராமல் பணியாற்றும் காவல் துறையினருக்கு இது உத்வேகத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. சாமானிய மக்களுக்கு நற்செய்தியாக, ஆட்சேபனையற்ற நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வசிக்கும் 86,000 பேருக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்படும் என்ற அறிவிப்பு வயிற்றில் பால் வார்ப்பதாக உள்ளது.

இதற்காக, பட்டா வேண்டுவோருக்கான வருமான உச்சவரம்பு ரூ.3 லட்சத்திலிருந்து ரூ.5 லட்சமாக உயர்த்திய முதலமைச்சரை மனதாரப் பாராட்டுகிறேன்.

அமைதிப்பூங்காவாக இருக்கும் தமிழ்நாட்டில் குழப்பம் ஏற்படுத்த அணி வகுத்து வருகிறார்கள். எத்தனை பேர் வந்தாலும், அவர்களை தமிழ்நாட்டு மக்கள் முற்றிலும் புறக்கணிப்பார்கள்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## மரக்காணம் ஒன்றியத் தலைவர்

# தயாளன் துணைவியார் பேபி அம்மாள் மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி

மரக்காணம், மே 3-

மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன் துணைவியார் ஒன்றிய கவுன்சிலர் பவித்ரா தயாளன் தாயார் பேபி அம்மாள் உடல் நலக் குறைவால் மறைவெய்தினார். அவரது உடலுக்கு தி.மு.க.வினர் அஞ்சலி செலுத்தினர்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவரும்,மரக்காணம் கிழக்கு ஒன்றிய செயலாளர் தயாளன் மனைவியும், ஒன்றிய கவுன்சிலர் பவித்ரா தயாளனின் தாயாருமான பேபி அம்மாள் வயது 60. இவர் சென்னை வேளச்சேரியில் தனது மகன் கணேசன், மருமகள் இந்துஜாவுடன் வசித்து வந்தார். உடல் நலம் பாதிக்கப்பட்ட பேபி அம்மாள்நேற்று அதிகாலை 4.00 மணி அளவில்உயிரிழந்தார். இதையடுத்து அவரது உடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இன்று 3.5.2025 மதியம் 2 மணிக்கு உயிரிழந்த பேபி அம்மாள் உடலைஊர்வலமாக கொண்டு சென்று



வேளச்சேரி சுடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது. உடல் நலக்குறைவால் உயிர் இழந்த பேபி அம்மாள் உடலுக்கு தி.மு.க. நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் உள்ளிட்டோர் நேரில் சென்று மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில், விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் மாவட்டம் விவசாய கமிட்டி அருகே நடைபெற்ற மே 1 தொழிலாளர்கள் தினம் விழாவில் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், பொதுக்குழு உறுப்பினர் TNJ.சம்பத், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் இரா.கேசவன், கோலியனூர் ஒ,பெருங்குழு தலைவர் இ.சச்சிதானந்தம், செ.மணிகண்டன் ஜெயா.பன்னீர் செல்வம், கோல்டு வெங்கடேசன், மா.து.தலைவர்கே.லட்சுமிபதி, எஸ்.செல்லதுரை, எஸ்.கே.எஸ்.முகமது அலி, மாநில தொ,மு.ச. தலைவர் மாரிமுத்து, மாநில பொ.செயலாளர், எம்.காசிநாதன், ஏ.செல்லதுரை, ஏ.பழனியப்பன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் பொன்பத்திஊராட்சியில் மே தினத்தை முன்னிட்டு ஊராட்சி மன்ற தலைவர் அனுசுயா மணிபாலன் தலைமையில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். அருகில் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,மாவட்ட ஊராட்சி செயலர் நடராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், பிரபா சங்கர், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை உள்ளனர்.